**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் “தாய்வீடு” பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், ‘தாய்வீடு’ தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

**- கே.எஸ். பாலச்சந்திரன் -**

**ஆடித்து முத்துக்கள் 27**

# ‘கலைத்தாரகை’ ஞெய் றஹீம் சஹீட்

இலங்கைவானொலியின் வர்த்தகசேவை நகைச்சுவை நாடகங்களிலும் ராமதாஸ் குழுவினரின் மேடைநாடகங்களிலும் மரிக்காரின் மனைவியாக கொழும்பு வாழ் முஸ்லீம் மக்களின் மொழிவழக்கில் அனாயாசமாக நடித்துக்கொண்டிருந்தார் ஒரு நடிகை. முஸ்லீம் சேவையில் ஒலிபரப்பான நாடகங்களிலும் அவரது குரல் அடிக்கடி ஒலிப்பதுண்டு. சனிக்கிழமைகளில் இரவு 9.30க்கு ஒலிபரப்பாகும் தமிழ்ச்சேவை ஒன்றின் நாடகங்களை காத்திருந்து கேட்கும் தமிழ்ரசிகர்கள் அக்காலத்தின் முஸ்லீம்வை நாடகங்களையும் மிகவும் விரும்பிக்கேட்பார்கள். அவர்களுக்கு இவரின் பெயரும் அனேகமாக தெரிந்த பெயராகவிருக்கும். அக்காலகட்டங்களில் வானொலிநிலையத்தில் நாங்கள் அவ்வபபோது கண்டிருந்தாலும் வெறும் புன்முறுவல் மட்டும்தான். பெரிய அறிமுகம் என்றில்லை.

பின்னர் நண்பர் ராம்தாஸ் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் ‘கிராமத்துக்கனவுகள்’ என்ற வானொலிதொடர்நாடகத்தை எழுத முற்பட்டபொழுது, கதாநாயகன் காதலித்து திருமணம்செய்து கொள்ளும் கொழும்பை பிறப்பிடமாகக்கொண்ட பெண்ணாக நடிப்பதற்கு ஒரு நடிகையை தேடியபொழுது, இவரை ராம்தாஸ் அறிமுகப்படுத்தினார். அவர்தான் ஞெய் றஹீம் சஹீட் என்ற மிகச்சிறந்த வானொலி நடிகை.

‘கிராமத்துக்கனவுகள்’ நாடகத்தில் இறுதியில் கதாநாயகன் இறந்துபோய்விடுகிறான். மனைவியுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவள் குடிப்பதற்கு வெந்நீர் எடுத்துக்கொண்டுவரப் போன இடைவெளியில் மரணித்துவிடுகிறான். திரும்பிவந்தவள், கணவன் இறந்துவிட்டதை உடனடியாக அவதானிக்கவில்லை. வழக்கம் போலவே அவனோடு உரையாடுகிறாள். கணவனிடமிருந்து பதில் வராததைக்கண்டு பேச்சை நிறுத்தி, உண்மை தெரிய வரும்போது, அவலமாக ஒரு ஓலம் எழுப்புகிறாள். ‘‘என்ரை ராசன்’’. ஏதிரொலிக்கிறது.

அந்த இரண்டே இரண்டு வார்த்தைகளில் உலகத்தின் சோகங்களையெல்லாம் தோய்த்து ஒலிக்கச்செய்து ஒலிப்பதிவுக்கூடத்தில் நின்ற சகநடிகர்களாகிய எங்களையெல்லாம் ஸ்தம்பிக்கச்செய்தவர், சகோதரி ஞெய் றஹீம் சஹீட். ஒலிப்பதிவாகி, ஒலிபரப்பாகி எத்தனை ஆண்டுகள் கழிந்தபின்பும், இன்றும் அதன் ஒலிப்பதிவை கேட்கும்போது, என்மனம் ஒருகணம் பதறிப்போய்விடுகிறது.

ஞெய் மலே இனத்தைச் சேர்ந்தவர். மலே மொழிபேசும் இவர்களின் முதாதையர்,



டச்சுக்காரரின் ஆட்சியில் இந்தோனேசியாவும், இலங்கையும் இருந்த காலத்தில் இந்தோனேசியாவிலிருந்து படைவீரர்களாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள். இன்னும் சில உயர்குடும்பத்து மலே மக்கள் அரசியல் காரணங்களுக்காக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாகவும் வரலாறு உண்டு. இலங்கையில் பொலிஸ், இராணுவம் போன்ற பாதுகாப்பு சேவைகளில் மலே மக்கள் அதிகமாக பணியாற்றியிருக்கிறார்கள். அத்தோடு சிறுபான்மையினங்களுக்குள், ஒரு சிறுபான்மையினமாக தங்கள் கலாசாரத்தையும், மொழியையும் பேணிக்கொண்டு தனித்துவமாக வாழ்கிறார்கள்.



முகத்துவாரப் பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றிய மலே இனத்தவரான ஜுமாத் என்பவரின் மகள் ஞெய் றஹீம் சஹீட். இவர் பிறந்த திகதி டிசம்பர் 13 1947ம் ஆண்டு. ஒரு அக்கா, ஒரு தங்கை, இரண்டு தம்பிகள் என்று ஐந்து பேர்.

போலிஸ் விடுதியில் இவர்களின் வீட்டுக்கு அருகில் சுப்பிரமணியம் என்று ஒரு தமிழ் பொலிஸ்காரரின் குடும்பம் இருந்ததாகவும், அவர்கள்தான் தான் தமிழில் தேர்ச்சிபெறக் காரணம் என்கிறார் ஞெய். சரஸ்வதி பூஜையன்று அரிசியில் ‘அனா, ஆவன்னா’ எழுதி ஆரம்பித்துவைத்ததே அவர்கள்தான் என்று நன்றியுடன் நினைவு கூருகிறார்.

பின்னர் இவரது தகப்பனார், திம்பிரிகஸ்யாயவுக்கு இடமாற்றலாகி வர, தனது ஆறாவது வயதில் திம்பிரிகஸயாய றோமன் கத்தோலிக்க பாடசாலையில் படிக்கத்தொடங்கினர். பாடகர் முத்தழகு, எழுத்தாளர் அந்தனி ஜீவா போன்றோர் இவருடன் படித்தவர்கள்.

பாடசாலை நாடக விழாவில், ஞானசௌந்திரி நாடகத்தில், ஞானசௌந்தரியாக நடித்தார். தன்னுடன் கூடநடித்த சகமாணவிகள் சிலர் பின்னர் இந்தியாவுக்கு குடிபெயர்ந்துவிட்டதாக கூறும் ஞெய், அவர்களில் ஒருவர் காந்திமதி என்றும், அவர்தான் திரைப்படங்களில் ‘அம்மா’ வேடங்களில் நடித்துவரும் நடிகை காந்திமதியாக இருக்கலாம் என்கிறார்.

‘ஒரு முறை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திலிருந்து ஒரு வேன் எங்கள் பாடசாலைக்கு வந்தது. கலை, நடிப்பில் திறமையான மாணவர்களை தேடி அவர்கள் வந்திருந்தார்கள். சரவணமுத்து மாமாதான் மாணவர்களை தேர்வு செய்தார். அதில் நான், தயாளன், இப்ராஹீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு வானொலி நிலையத்தில் ‘வளரும் பயிர்’ நிகழ்ச்சியில் பங்கு பற்றச் செய்தார்கள். அப்போது அங்கே விமல் சொக்கநாதன் (இப்போதைய, பிபிசி அறிவிப்பாளர்), அவரது சகோதரி யோகாதில்லைநாதன், இக்பால், லோகாம்பிகை, பிரதாபன் ஆகியோரும் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றினார்கள். எனக்கு முதலில் கடிதம் வாசிக்க தான் தந்தார்கள்.

இப்படித்தான் என் வானொலி பிரவேசம் நடந்தது’ என்றார் ஞெய்.

தொடர்ந்து இலங்கைவானொலியின் தேசிய சேவையிலும், முஸ்லீம் சேவையிலும் நடிகர் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, நாடகத் தயாரிப்பாளர் சானாவின் தமிழ்சேவை நாடகங்களிலும், மர்ஹூம் எம்.உச். குத்தூஸ் தயாரித்த முஸ்லீம் சேவை நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

சானாவின் காலத்தில் புகழ்பெற்ற வானொலி நாடக நடிகர்களாக விளங்கிய ரோசய்ரோ பீரிஸ், தாசன் பெர்னான்டோ, பிலோமினா சொலமன் போன்றவர்கள் இவரது சகநடிகர்களே.

மேடை நாடகங்களிலும் அவ்வப்போது நடித்திருக்கும் ஞெய், ஆரம்பத்தில் ஜே.பி. றொபேட் என்பவரின் இயக்கத்தில் ‘கவின் கலைமன்றத்தின்’ மேடைநாடகங்களில் நடித்ததோடு, எஸ்.ராமதாஸின் நகைச்சுவை நாடகங்களிலிருந்து அண்மைக்காலம்வரை இளைய தலைமுறையினரின் நாடகங்களிலும் நடித்து வருகிறார்.

தற்போதும் வானொலியின் தேசிய சேவை நிகழ்ச்சிகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இடையிடையே அழைப்பு வரும் போது பங்குபற்றி வருவதாக சொல்கிறார். இவரது கணவனும் பொலிஸ் உத்தியோகத்தர்தான். மூன்று ஆண்பிள்ளைகள். மூவரும் திருமணம் செய்துகொண்டு வாழ்கிறார்கள். பெண்களும், ஆண்களுமாக நான்கு பேரப்பிள்ளைகள்.

“மகிழ்ச்சியான அனுபவங்களாக எதைக் கருதுகின்றீர்கள்?” என்று கேட்கப்பட்டபொழுது ‘எனது நாடகங்களுக்கு கிடைக்கும் பாராட்டுக்கள் விமர்சனங்களைத்தான். ஒரு முறை தினகரனில் நான் நடித்த ‘ஏமாற்றம்’ நாடகம் பற்றிய விமர்சனத்தை அ.ந. கந்தசாமி எழுதியிருந்தார். அதில் அவளின் கண்களும் பேசுகிறது என்று என்னை குறிப்பிட்டிருந்தார். அது எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தது.’ என்று கூறுகிறார் ஞெய்.

“போராடி வாழ்வதுதான் வாழ்க்கை, போராட்டம் இல்லாத வாழ்க்கை உப்பில்லாப் பண்டம் போல. நான் வாழ்ந்த வாழக்கை போதாது என்றே தோன்றுகிறது. நான் மீண்டும் வாழ ஆசைப்படுகிறேன். கடவுள் என்முன்னால் தோன்றினால் எனக்கு இன்னொரு முறை வாழ ஒரு வரம் தா என்று தான் கேட்பேன்’’ என்று முடித்தார் ஞெய் றஹீம் சஹீட்.

தமிழை தன் தாய்மொழியாகக் கொண்டிராவிடினும், நீண்டகாலமாக ஏறக்குறைய மூன்று தலைமுறைக் கலைஞர்களுடன் தன் கலைப் பணியை ஆற்றி இப்போதும், அதே உற்சாகத்துடன் செயற்பட்டுவரும் இந்த கலைஞருக்கு என் வாழ்த்துக்கள்.

ஒரு குறிப்பு. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ‘கிரமத்துக்கனவுகள்’ வானொலித் தொடர் நாடகத்தில் இவருடைய ‘இறந்துபோகும்’ கணவனாக நடித்தது நான்தான். அதுவே இவரும் நானும் நடித்த கடைசியும், முதலுமான வானொலி நாடகமாக அமைந்து போனது கவலைதான்.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■